بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/11/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 36 அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சிறிதளவு எடுத்துரைக்கப்பட்டிருந்தது. இது குறித்து உள்ள அறிவிப்புகளில் இதுவும் உள்ளது: அன்னார் தலைமுறையை எடுத்துரைப்பதில் கைதேர்ந்தவராக இருந்தார்கள். கவிதை ஆர்வமும் கொண்டிருந்தார்கள். அன்னார் மக்களில் எல்லாரையும் விட அதிகம் அரேபியர்களின் வம்சாவளித் தொடர்களை அறிந்தவராக இருந்தார்கள். குறிப்பாக, குறைஷியர்களின் நன்மை தீமைகளை எல்லாரையும் விட அதிகமாக அறிந்திருந்தார்கள்.

ஆனால், அன்னார் அவர்களின் தீமைகளைப் பற்றிக் கூற மாட்டார்கள். இதன் காரணமாகவே, அன்னார் ஹஸ்ரத் அகீல் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களை விட குறைஷியர்களில் அதிகம் ஏற்றுக் கொள்ளப்பட்டவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு அடுத்தபடியாக ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்கள் குறைஷியர்களின் வம்சாவளித் தொடர், அவர்களது மூதாதையர்கள் மற்றும் அவர்களது நன்மை தீமைகள் குறித்து எல்லாரையும் விட அதிகமாக அறிந்தவராக இருந்தார்கள். ஆனால், குறைஷியர்களுக்கு ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்களைப் பிடிக்காது. ஏனென்றால், அவர்கள் குறைஷியர்களின் தீமைகளையும் பட்டியலிட்டு வந்தார்கள்.

மக்கா வாசிகள் பார்வையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களின் சிறந்த மக்களில் ஒருவராக இருந்தார்கள். ஆக, அவர்களுக்கு எப்போது ஏதும் சிரமம் ஏற்பட்டாலும் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உதவி கோரி வந்தனர். குறைஷிய கவிஞர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வசைபாடி கவிதைகள் கூறிய போது, அவர்களது கவிதைகளுக்கு பதிலடி கொடுக்கும் பொறுப்பு ஹஸ்ரத்

ஹஸ்ஸான் பின் சாபித் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் சாபித் (ரலி) அவர்களிடம், 'குறைஷியர்களின் வம்சாவளிகளின் விவரத்தை அபூபக்ரிடம் கேட்டுக் கொள்வீராக!' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்களின் கவிதைகள் மக்காவுக்கு செல்லும் போது அந்த மக்கள், 'இந்தக் கவிதைகளுக்குப் பின்னால் அபூபக்ரின் வழிகாட்டலும் ஆலோசனையும் இருக்கிறது' என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள், 'ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முறையாக கவிதைகள் கூறினார்களா, இல்லையா?' என்ற விவாதத்தை மேற்கொண்டுள்ளர்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கவிதைகள் உள்ளடங்கிய, 25 கவிதை வரிகளைக் கொண்ட ஒரு மடல் துருக்கியின் நூலகத்தில் இருந்து கிடைத்துள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கவிதைகள் என்று அவை குறித்து கூறப்படுகிறது.

எழுதக்கூடியவர் ஒருவர், 'இந்தக் கவிதைகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் எழுதப்பட்டது என எனக்கு இல்ஹாம் மூலமாக சான்றளிக்கப்பட்டது' என்ற அளவுக்கு எழுதியிருக்கிறார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சில கவிதைகள் கூறினார்கள் என்றே தபக்காத் இப்னு சஃது மற்றும் சீரத் பின் ஹிஷ்ஷாமில் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்தின் போது, அன்னாரின் நல்லடக்கத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாக இந்தக் கவிதை வரிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அந்தக் கவிதைகளின் மொழியாக்கம் இதுவாகும்:

"கண்ணே! உனக்கு ஈருலக தலைவர் (ஸல்) அவர்களுக்காக அழுவதற்கான உரிமை மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நீ அழுது கொண்டே இரு! உனது கண்ணீர் ஒருபோதும் நிற்காதிருக்கட்டும்! கண்ணே! மாலை நேரத்தில் கபரில் மறைக்கப்பட்ட, குறைஷி குலத்தின் சிறந்த புதல்வருக்காகக் கண்ணீர் வடி! எனவே, அரசர்களுக்கெல்லாம் அரசனான, அடியார்களின் எஜமானான, இபாதத் செய்பவர்களின் அந்த இறைவனின் துரூத் அன்னார் (ஸல்) மீது உண்டாகட்டுமாக! அன்பர் (ஸல்) அவர்கள் பிரிந்த பிறகு, இப்போது வாழ்வு எப்படி இருக்கும்? பத்துலகங்களுக்கு அணி சேர்க்கக்கூடிய நபர் பிரிந்த பிறகு, இனி அழகு எங்கே இருக்கும்? நாம் அனைவரும் வாழ்வில் ஒன்றாக இருந்தது போன்றே, மரணமும் நம் அனைவரையும் ஒன்றாக சூழ்ந்து கொண்டிருக்கக்கூடாதா?"

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் புத்திக்கூர்மை உடையவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உலகத்துக்கான அல்லது அல்லாஹ்விடம் இருக்கும் விஷயத்துக்கான

அதிகாரத்தை அல்லாஹ் ஓர் அடியானுக்குத் தந்தான். ஆக, அவர் அல்லாஹ்விடம் இருக்கும் விஷயத்தைத் தேர்ந்தெடுத்தார்.'

இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். அப்போது நான் எனது உள்ளத்தில், 'எந்த விஷயம் இந்தப் பெரியவரை அழ வைக்கிறது? என்று கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அபூபக்ரே! அழாதீர்! நிச்சயமாக, மக்களில் எல்லாரையும் விட அதிகம் தமது நெருக்கம் மற்றும் செல்வத்தால் எனக்கு நன்மை புரிந்தவர் அபூபக்ரே ஆவார். நான் எனது சமுதாயத்திலிருந்து யாரையாவது கலீல் (எனப்படும் நெருங்கிய தோழராக) ஆக்குவதாக இருந்திருந்தால், அபூபக்ரை ஆக்கியிருப்பேன்.

இது சம்மந்தமாகவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்வின் கடைசி நாள்கள் வந்த போது, ஒருநாள் ஹுஸூர் (ஸல்) அவர்கள் சொற்பொழிவாற்றுவதற்காக எழுந்து நின்றார்கள். மேலும், சஹாபாவைப் பார்த்து கூறினார்கள்:

''மக்களே! அல்லாஹ்வின் ஓர் அடியார் இருக்கிறார். அவரைப் பார்த்து அவரது இறைவன் கூறினான்: 'எனது அடியானே! நீ விரும்பினால் உலகில் இருப்பதற்கும், விரும்பினால் என்னிடம் வருவதற்குமான (தேர்ந்தெடுக்கும்) அதிகாரத்தை நான் உனக்கு வழங்குகிறேன். இதற்கு அந்த அடியார் இறை நெருக்கத்தைத் தேர்ந்தெடுத்தார்.''

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கூறிய போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். அன்னார் தேம்பி தேம்பி அழுதார்கள். கடைசியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ரை நான் எந்த அளவு நேசிக்கிறேன் என்றால், இறைவனைத் தவிரவும் எவரையாவது கலீல் (எனும் நெருங்கிய நண்பராக) ஆக்குவது ஆகுமானதாக இருந்திருந்தால், அபூபக்ரை ஆக்கியிருப்பேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ என்ற வசனத்தை ஓதிய போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். இந்தக் கிழவர் ஏன் அழுகிறார் என்று ஒருவர் கேட்டார். மேலும், 'எனக்கு இந்த வசனத்திலிருந்து இறைதூதர் (ஸல்) அவர்களின் வஃபாத்தின் வாடை வருகிறது.' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) ஆட்சியாளர்களாக இருக்கிறார்கள். எவ்வாறு பாதுகாப்புப் பணிக்கான ஊழியர் தனது வேலையை செய்து முடித்து விட்ட பிறகு, அங்கிருந்து சென்று விடுகிறாரோ அவ்வாறே, நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) எந்தப் பணிக்காக உலகிற்கு

வருகிறார்களோ அதை செய்து முடித்து விட்ட பிறகு, அவர்கள் இந்த உலகிலிருந்து விடைபெற்றுச் சென்று விடுகிறார்கள். எனவே, اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُم என்ற ஓசை எட்டிய போது, இது கடைசி ஓசையாகும் என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புரிதல் மிகவும் மேலோங்கியிருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புத்திசாலியாக இருந்தார்களா, இல்லையா என்று மவ்லவிகளிடம் கேளுங்கள். அவர்கள் சித்தீக் என்று அழைக்கப்பட்டு வந்த அந்த அபூபக்ராக இருக்கவில்லையா? இந்த நபரே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முதல் கலீஃபாவாக ஆகவில்லையா? மார்க்கத்தை விட்டு செல்லுதல் எனும் பயங்கரமான உயிர்கொல்லி நோயைத் தடுத்து, அவர்கள் இஸ்லாத்துக்கு மாபெரும் தொண்டாற்றவில்லையா? பிறகு, இறையச்சத்துடன் கூறுங்கள். அவர்கள் وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ என்ற வசனத்தை ஓதிய போது, அதைக் கொண்டு முழுமையான விளக்கம் அளிப்பதாக இருந்ததா? அல்லது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மரணித்தவராகக் கருதுபவர் காஃபிர் ஆகிவிடுகிறார் என்று ஒரு குழந்தையும் சொல்லும் அளவுக்கு அறைகுறையான விளக்கமாக அது இருந்ததா?

அதாவது, இந்த வசனத்தை ஓதியதன் பொருளே ஒரு தெளிவான மற்றும் வலுவான ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றிருந்ததே அன்றி, அறைகுறையான ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று இருக்கவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُم என்ற வசனம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, உம்மை தூய்மை படுத்தி விட்டேன். இரண்டாவது, நூலை முழுமை படுத்தி விட்டேன். பணி நிறைவடைந்து விடும் போது, அது நிறைவடைவதே வஃபாத்தைக் குறிக்கிறது என்பது நிர்ணயிக்கப்பட்ட விஷயமாகும். உதாரணமாக, உலகில் பாதுகாப்புப் பணி செய்யப்படுகிறது. அது முடிவடைந்ததும் செயற்குழு அங்கிருந்து சென்று விடுகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிய விஷயத்தைக் கேட்ட போது, 'எல்லாரையும் விட அதிகம் புரிபவர் அபூபக்ர் ஆவார்' என்று கூறினார்கள். மேலும், உலகில் யாரையாவது தோழராக ஆக்கிக் கொண்டிருந்தால் அபூபக்ரை ஆக்கியிருப்பேன்' என்று கூறினார்கள். மேலும், 'அபூபக்ர் உடைய ஜன்னல் பள்ளிவாசலில் திறந்திருக்கும். மற்ற அனைத்தையும் அடைத்து

விடுங்கள்' என்று கூறினார்கள். இதில் உள்ள பொருத்தம் என்ன?' இது எதைக் குறிக்கிறது?

அன்னார் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! பள்ளிவாசல் இறையில்லமாகும். அது அனைத்து அறிவாழங்கள் மற்றும் ஞானங்களின் ஊற்றாகும். எனவே தான், 'அபூபக்ரின் உட்புற ஜன்னல் இதன் பக்கம் இருப்பதனால், அவருக்காக இந்த ஜன்னலும் வைக்கப்படட்டும்' என்று கூறினார்கள்.

ஏனைய சஹாபா பேறிழந்தவர்களாக இருந்தார்கள் என்பது அல்ல. அவர்களிலும் பெரும்பெரும் நுண்ணறிவு உடையவர்கள் இருந்தார்கள்தான். ஆனால், எல்லாரையும் விட அதிகம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இருந்தது. இன்னும் கூறுவதாயின், ஆரம்பத்திலும் இறுதியிலும் தனது முன்மாதிரியைக் காட்டிய, அந்த சொந்த நுண்ணறிவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்பு இருந்தது. ஆக, அபூபக்ர் அவர்கள் நுண்ணறிவுகளின் திரளாகத் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அனுபவசாலியாகவும் நுண்ணறி பெற்றவராகவும் இருந்தார்கள். அன்னார் பெரும் நெருக்கடியான விஷயங்கள் மற்றும் அவற்றின் கடுமைகளைக் கண்டார்கள். பல போர்களில் கலந்து கொண்டார்கள். அவற்றின் போர் நடவடிக்கைகளைப் பார்த்துள்ளார்கள். பல பாலைவனங்களையும் பல மலைப் பிரதேசங்களையும் கடந்திருக்கிறார்கள். எத்தனையோ அழிவிற்கான இடங்களில் அன்னார் தயங்காமல் நுழைந்து விட்டார்கள்.

எத்தனையோ கோணலான வழிகளை அன்னார் சீராக்கியுள்ளார்கள். பல போர்களில் அன்னார் முன்னால் அடியெடுத்து வைத்துள்ளார்கள். எத்தனையோ குழப்பங்களை அன்னார் அழித்து இல்லாமல் செய்தார்கள். அன்னார் அனுபவசாலியாகவும் நுண்ணறிவு மிக்கவராகவும் ஆகும் அளவுக்குப் பல மயில்கற்களைக் கடந்தார்கள்.

அன்னார் இன்னல்களில் பொறுமை காட்டுபவராவும் கடும் உழைப்பாளியாகவும் இருந்தார்கள். எனவே, அல்லாஹ் தனது வசனங்கள் சென்றடையும் இடமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருப்பதற்காக அன்னாரைத் தேர்ந்தெடுத்தான். அன்னாரது உண்மை மற்றும் உறுதித்தன்மை காரணமாக அன்னாரைப் புகழ்ந்தான். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவர்களில் எல்லாரையும் விட மேலானவர் என்பதை இது சுட்டிக் காட்டியது.

அன்னார் சுதந்திரமானவராகப் பிறக்க வைக்கப்பட்டார்கள். நன்றியுணர்வு அன்னாருக்கு சங்கில் ஊட்டப்பட்டிருந்தது. இந்தக் காரணத்தினாலேயே, ஆபத்தான, முக்கியமான விஷயங்களின் போதும், கதிகலங்கச் செய்யும் அச்சத்தின் போதும் அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அல்லாஹ் மிக்க ஞானமுள்ளவனும்

நுண்ணறிவுள்ளவனும் ஆவான். அவன் அனைத்தையும் அவற்றுக்கான இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் வைக்கிறான். அவன் இப்னு அபீ கஹாஃபா மீது சிறப்பான கருணை பார்வையை செலுத்தினான். மேலும், அவரை தனித்த ஆளுமை உடையவராக ஆக்கி விட்டான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும் திறமையும் அதிகம் இருந்தது. கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும் ஞானத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கைதேர்ந்தவராக இருந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. எதுவரை என்றால், உலகங்களின் அரசர் ஹுஸூர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் அன்னார் கனவுகளுக்கு விளக்கம் அளித்து வந்தார்கள். இமாம் முஹம்மத் பின் ஸீரீன் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கனவுகளுக்கு விளக்கம் அளிப்பதில் எல்லாரையும் விடப் பெரியவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இல்லாத போது, எந்த சில மக்களுக்கு நபவீ பள்ளிவாசலில் தொழ வைப்பதற்கான நற்பேறு கிடைத்ததோ அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறுதி நாள்களில், குறிப்பாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க தொழுகைகளைத் தொழவைப்பதற்கான நற்பாக்கியம் அன்னாருக்குக் கிடைக்கப் பெற்றது. இது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு தனிச்சிறப்புமிக்க நற்பேறாகும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ர் இருக்கும் போது வேறு யாரும் இமாமத் செய்வது பொருத்தமானதல்ல.

*இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இந்தக் குறிப்பு இனியும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**